# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No. 137/2025** |
| Prosecution witness | : | P.W. 1 |
| List of witness | : | L.W.1 |
| Name | : | ஐய்யப்பன் |
| Father's /Husband Name | : | சுப்ரமணியன் |
| Village | : | ஆவணம் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 43 |
| Occupation | : | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 07th day of May 2026. Accused present.

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து விவசாயம் வேலை இருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது ஊர்காரர் ஆவார். அவர்தான் என்னை அடித்தார். கடந்த 21.04.2025 ஆம் தேதியன்று திரௌபதி அம்மன் கோவில் தீமிதி திருவிழா எங்கள் ஊரில் நடைபெற இருந்ததால் நான் எனது அக்கா கலைசெல்வி விட்டிலிருந்து ஊருக்கு வந்தேன். நான் கோவிலில் விளக்கு ஏற்றி வைத்துவிட்டு இரவு சுமார் 08.00 மணியளவில் என் விட்டு வாசலில் எனது வண்டியில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். அப்போது வடிவேல் வீட்டில் வேலை பார்க்கும் செல்வமணி என்பவர் என் வீட்டு வாசலுக்கு வந்து ஏன் என்னை கூப்பிட்டாய் என்று கேட்டார். அதற்கு நான் கூப்பிடவில்லை என்று சொன்னேன். அதற்கு செல்வமணி என்னை குச்சிகாரி மவனே, தேவடியா மவனே என்று திட்டினார். பின்னர் அவர் கையில் வைத்திருந்த கத்தியின் பின்புற பிடரியால் எனது தாவாங்கட்டையில் அடித்தார். அதில் எனக்கு மேல் பல் இரண்டு உடைந்து விட்டது. (**சாட்சி நீதிமன்றத்தில் இரண்டு பல் இல்லாததை காட்டினார்**). நான் கீழே விழுந்து விட்டேன். எனக்கு வலி தாங்க முடியவில்லை. நான் சத்தம் போட்டேன். அருகில் இருந்தவர்கள் ஓடி வந்ததை பார்த்த எதிரி செல்வமணி கத்தியை காண்பித்து என்னை காலி செய்து விடவேன் என்று மிரட்டி விட்டு அங்கிருந்து ஓடினார். ஓடும் போதும் என்னை திட்டிக்கொண்டே ஓடினார். அப்பு என்பவர் என்னை குடவாசல் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார். நான் குடவாசல் மருத்துவமனையில் இருந்த போது எனது அப்பா சுப்ரமணியனும் எனது அக்கா கலைசெல்வியும் அங்கு வந்து விட்டார்கள். குடவாசல் மருத்துவர்கள் திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக போக சொன்னார்கள். அதன்

அடிப்படையில் நானும் திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றேன். நான் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த போது போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :- வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

**மறு விசாரணை** :- இல்லை.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.07 15:29:07 +0530

`

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.